மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மக்களைக் கவரத்தக்க வகையில் எந்த, எந்தத் துறைகளை எல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த அந்தத் துறைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி: மதுவினுடைய தீமைகளைப்பற்றி எடுத்து விளக்கும் போஸ்டர்களை எல்லாம் மதுக்கடைகளுக்குப் பக்கத்தில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோன்ற போர்டுகளை வைக்க வேண்டாம். மது அருந்திக் கஷ்டப்படுகிறவர்களைக் கடைகளின் அருகில் பார்த்தாலே அதன் தீமைகளை உணர்ந்து கொள்ளலாம்.

* 398 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state whether there are proposals under the consideration of the Government to enlist the services of religious heads for propagating prohibition?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. என். டென்னிஸ் : மதத் தலைவர்கள் இப்பணியில் ஊதியத்தை எதிர்பார்க்காமல் ஈடுபடுவார்கள். ஆகவே அரசு அவர்களது சேவையைப் பயன்படுத்திக் கொள்ள அவர்களை அழைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சேவை என்பது அவர்களாக முன் வந்து ஆற்ற வேண்டிய ஒன்று. கோரிப்பெறுவது அல்ல. அவர்கள் அதுபோன்ற சேவையில் ஈடுபடத்தாமே முன்வருவார்களானால், அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்.

* 399 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுவிலக்கு அமலுக்கு வருவதற்கு முன்பு, அரசு ஒரு ஆண்டிற்குப் பெற்று வந்த கலால் வரி எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இம்மாநிலத்தின் எப்பகுதியிலும் மதுவிலக்கு செயலில் இல்லாத காலத்தில், ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தில் 1945-46-ஆம் ஆண்டில் ஆயத் தீர்வை மூலம் கிட்டடிய மொத்த வருவாய் ரூபாய் 15.9 கோடி ஆகும். இதில் கன்னியாகுமரி மாவட்டம் தவிர, தற்போதைய தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களின் ஆயத்தீர்வை வருவாய் 1945-46-ல் ரூபாய் 9.46 கோடி ஆகும்.

திரு. கே. எ. வகாப் : மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட பிறகு இப்போது வருகிற வருமானம் அரசு எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

1971 டிசம்பர் 15]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிட்டத்தட்ட 15 கோடி வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அடுத்த முழு ஆண்டுக்கு 20 கோடி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே 45-46-இல் கிடைத்ததைவிட இப்போது அதிகமாகக் கிடைக்கிறது என்றுதான் பொருள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 1971-72 இல் 15 கோடி வரும் என்று எதிர்பார்ப்பதாகச் சொன்னார்கள். பத்திரிக்கை மூலமாகக் கிடைத்த தகவல்களில் இருந்து இன்னும் அதிகமாகவே வந்திருக்கும் போலிருக்கிறதே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆயத்தீர்வை கணக்கில் எடுக்கப்படவில்லை. அவைகளைச் சேர்த்தால் நான் கிட்டத்தட்ட 15 கோடி என்று சொன்னேன். இன்னும் அதிகமாகக் கூட வரலாம்.

Tamil medium students in Colleges

*400 *Q.*—Thiru A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the incentives granted to students taking Tamil medium in Colleges.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பி.ஏ., பி.எஸ்சி., பட்ட வகுப்புகளில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 180 உதவித் தொகையும் புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்று மொழியாகத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்க ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையும் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தத் தொகை போதாது என்கிற கோரிக்கை இந்த அரசுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, போதாது என்ற கோரிக்கை வரவில்லை. ஏற்கனவே முழு உதவித் தொகை—ஸ்காலர்ஷிப்—பெற்று வருகிற மாணவர்களுக்கும்கூட இந்தத்தொகை கொடுக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கைதான் வந்தது அதற்காகக் கிளர்ச்சி செய்தார்கள். எல்லோருக்குமே ரூ. 180 கொடுப்பது என்பது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படி தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம்பெறுகிற பட்டதாரிகளுக்கு உரிய முதலிடம் எந்த எந்தத் துறைகளில் எந்தப் பதவிகளுக்கு வழங்கப்படுகின்றன? அந்தப் பட்டதாரிகளுக்கு முதலிடம் தருகின்றவகையில் எல்லாத் துறைகளுக்கும் இதை விரிவுபடுத்தி, தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம் பெற்றவர்களை அரசாங்கம் ஊக்குவிக்கத் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் படுமா?